**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 250/2015**

**Date** : 09.02.2026

பி.வா.சா.1 - **இராஜாகுமார்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி**.

நான் 3-ம் பிரதிவாதி அலுவலகத்தில் எந்த ஆண்டு முதல் பணிபுரிந்து வருகிறேன் என்றால் 2024 முதல் பணிபுரிந்து வருகின்றேன். நான் பணியில் சேருவதற்கு முன்புள்ள விபரங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் நேரடியாக தெரியாது ஆவணங்களின் அடிப்படையில் தெரியும். நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க இந்த அலுவலகத்தில் எனக்கு அதிகாரம் கொடுத்துள்ளார்கள் என்றால் கொடுத்துள்ளார்கள். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு பட்டிகை சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 2.33 சென்டு ஆகும். மேற்படி சொத்து ஆதியில் அருணாசல அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

பார்வதிபுரம் உடமூட்டு தர்மத்திற்கு பாத்தியப்பட்டது. மேற்படி தர்மத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு எவ்வித ஆவணங்களும் இல்லையென்றால் சரியல்ல. செட்டில்மெண்டு ஆவணம் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உடமூட்டு தர்மத்திலிருந்து திருச்செந்தூர் சுவாமி அறக்கட்டளைக்கு வழக்கு பட்டிகை சொத்து கைமாற்றம் செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் 1907 -ம் வருட செட்டில்மெண்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீடு மிகப்பழமையான வீடு என்றால் சரியல்ல. மேற்படி வீடு சுமார் எத்தனை வருடம் பழமையானது என்றால் 15 வருடம் ஆகும். மேற்படி வீடு வாதி மற்றும் வாதியின் முன்ஜென்மிகளால் கட்டப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்திலிலுள்ள கட்டிடம் அருள்மிகு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறக்கட்டளையால் கட்டப்படவில்லை என்றால் சரிதான். வாதி மேற்படி வழக்கு பட்டிகை சொத்திலுள்ள கட்டிடத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்திற்கான வீட்டு வரிகள் அனைத்தும் வாதி தான் கட்டி வருகிறார்

என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் தெரியும். 2007-ம் ஆண்டு அருள்மிகு திருச்செந்தூர் சுவாமி அறக்கட்டளையால் குடியிருந்து வரும் நபர்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பு குறித்து தெரியுமா என்றால் வழக்கு ஆவணங்கள் வழியாக தெரியும். மேற்படி அறிவிப்பிற்கு வாதி தரப்பில் தங்களுக்கு பாத்தியப்பட்டதாக பதில் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. உடமூட்டு தர்மத்திற்கு பாத்தியப்பட்டதாக தான் கொடுத்தார்கள்.

நான் எனது முதல் விசாரணையில் 15,02,2008 தேதியிட்ட இந்து சமய அறநிலையத்துறை, நாகர்கோவில் மேற்கு சரக ஆய்வர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேலும் 26.03.2008 தேதியிட்ட திருநெல்வேலி மண்ட இணை ஆணையரால் அனுப்பபட்ட கடிதம் என்று குறிப்பிட்டுள்ளேன். மேற்படி கடிதமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் உண்மையில் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக தயாரித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் முதல் விசாரணையில் முறையாக அறக்கட்டளை நிர்வகிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன். ஆனால் எப்போது நிறுவப்பட்டு யாரால் நிர்வகிக்கப்பட்டது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான்.

மேலும் முதல் விசாரணையில் குடியிருப்பவர்களின் விபரம் மற்றும் நிலை குறித்து ஆராயப்பட்டதில் எவ்வித முறையான அனுமதியின்றி குடியிருந்து வருவதால் ஆக்கிரமிப்பாளாராக கருதி என்று குறிப்பிடப்பட்ள்ளது. ஆனால் அதுசம்மந்தமாக எந்த ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி சொத்துக்களை பாதுகாக்கும் பொருட்டு அளவீடுகள் செய்யப்பட்டு என்று குறிப்பிட்டுள்ளேன். ஆனால் யாரால் அளவீடு நடந்தது என்ற விபரம் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆராயப்பட்டது மற்றும் ஆக்கிரமிப்பாளர்கள் என்று குறிப்பிடுவது பொய் என்றால் சரியல்ல. மேலும் 27.08.2007 அன்று கொடுத்த பதில் அறிவிப்பில் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல.

உடமூட்டு தர்மத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேலும் முதல் விசாரணையில் 15.01.2008 தேதியிட்ட இந்து சமய அறநிலையத்துறை ஆணைய உத்தரவு குறித்து குறிப்பிட்டுள்ளேன். அது ஒரு இல்லா நிலை உத்தரவு என்றால் சரியல்ல. அதனால் தான் மேற்படி உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உத்தரவு உள்ளது. இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேலும் முதல் விசாரணையில் நீதிப்பேராணை மனு குறித்து குறிப்பிட்டுள்ளேன். மேற்படி மனுவில் வாதி தரப்பினர் இல்லையென்றால். சரிதான்.

2014-ம் ஆண்டில் வாதியின் வீட்டின் அருகிலுள்ள சந்திரன் என்பவரின் வீட்டு காம்பவுண்டு சுவர் எங்கள் அலுவலர்களால் இடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் அனுபவத்திற்கு நாங்கள் இடையூறு செய்ததால் வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வாதி பெயரில் கொடுக்கப்பட்ட வீட்டு வரி ரசீதை ரத்து செய்ய கோரி நகராட்சியில் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அதைபோல் மின்சார இணைப்பை துண்டிக்க வேண்டி மனு கொடுத்தோம் என்றால் சரியல்ல. மேற்படி வாதிக்கு அவர் அனுபவத்தில் தொடர்ந்து பாதிப்பு ஏற்படுத்தியதால் அவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேலும் முதல் விசாரணையில் எம்.பி.17/16 மனு நிலுவையில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன்.

வாதி உட்பட பல நபர்களுக்கு 3-வது பிரதிவாதியால் நிரப்பபடாத ஒரு படிவம் கொடுத்து அதில் கையெழுத்து போட்டு தந்தால் வாதியின் அனுபவத்தை தொந்தரவு செய்யமாட்டோம் என்று கூறி கையெழுத்து பெற்றோம் என்றால் சரியல்ல. அவ்வாறு பெற்ற நிரப்பபடாத படிவத்தில் கையெழுத்து பெற்றுவிட்டு அதனை நிரப்பி வாதி உட்படி பல நபர்களுக்கு தொந்தரவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கு குறித்து சாட்சி சொல்ல தகுதியுடைய நபர் என்றால் சரியல்ல. மேலும் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வாதி கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.